செ.கு.எண் - 85 நாள் :- 26-02-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.2.2012

வேலூர் மாவட்டம், ஆம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. சண்முகம் அவர்கள் 24.2.2012 அன்று பாதுகாப்புப் பணியை முடித்து, காவல் நிலையத்திற்கு தனது இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது, வேலூர் - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், சோமலாபுரம் கிராமத்திற்கு செல்லும் சாலை அருகே விபத்து ஏற்பட்டு படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சண்முகம் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. பணியில் இருக்கும் போது காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9